கொள்கிறேன். ஆண்டாள் கோவிலில் தங்களுக்காக விசேஷ மரியாதை செய்கிறேன் என்று கூறிக்கொண்டு, இந்தப் பழப் பண்ணை எவ்வளவு ரூபாயில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. எப்போது முதல் இது செயலுக்கு வரும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, $3\frac{1}{2}$ லட்சம் ரூபாயில் பழப்பண்ணை செயல்பட இருக்கிறது. ஆணை யிடப்பட்டிருக்கிறது, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. விசேஷ மரியாதை செய்வதற்கு நன்றி.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்தப் பழப் பண்ணை வரக்கூடாது என்று விஷமிகள் சிலர் அந்த இடத்தில் 7 லட்சம் ரூபாய் செலவில் கண்மாய் அமைக்க திட்டமிட்டிருக் கிறார்கள் என்பது உண்மையா? அந்த பைல் ரெவின்யு இலாகா வில் உருவாகி இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தாமரைக்கனியின் துணை இருக்கும்போது விஷமிகளை முறியடிப் பது எளிதான காரியம்.

மதுரை—தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம்.

* வினா எண் 131—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மதுரை-தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதுரை-தேனி-குமுளி சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவது குறித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படவில்லை. தொண்டி—மதுரை—கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்று வதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் வினாவில் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதி சாலையான மதுரை-தேனிசாலை அடங்கும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரையிலே இருந்து தேனி வரை செல்லுகின்ற 47 மைல் தூரத்தை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் திண்டுக்கல் தேனியை இணைத்து குமுளி வரை பாதை அமைத்தால் கூடலூர் —திருவனந்தபுரம் புதிய தேசிய நெடுஞ்சாலை ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்தப் பகுதியிலே தொழில் வளம் பெருக வும் ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் அதையும் இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

1981 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றவேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். ஆனால் ஒரு கிலோ மீட்டர் சாலை கூட புதிய சாலையாக கொடுக்கப்படவில்லை. ஆகவே ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, வேண்டுகோள் விடுக்கப்பட்ட சாலைகளை முதலிலே கவனித்துவிட்டு பின்னால் இந்த சாலைக்கு வரலாம்.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட இந்த சாலைகளுடைய பணிகள் எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஏற்கனவே சேர்க்கப்பட்ட சாலைகளுக்குத்தான் என்று சொன்னேன். மதுரை-தேனி சாலையில் ஒரு பகுதி தேசிய நெடுஞ்சாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறது, என்பதைத்தான் சொன்னேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்திலே தேசிய நெடுஞ்சாலைகளுக்கு பரிந்துரை செய்யப்பட்ட சாலைகள் 1981–82-ல் எத்தனை? அதிலே எத்தனை மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டது? மற்ற மாநிலங்களிலேயிருந்து எவ்வளவு பரிந்துரை செய்தார்கள்? அவர்களுக்கு எவ்வளவு அனுமதி கிடைத்தது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 16 மாநில சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் இதுவரையில் ஒரு சாலை கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்கான நிதியும் கொடுக்கப்படவில்லை. ஆனால் இதற்கு மாறாக அசாம் மாநிலத்திற்கு புதிய சாலைகள் போடுவதற்கு பணம் கொடுத்திருக்கிறார்கள். அதே வேண்டுகோளை மையமாக வைத்து தமிழகத்திற்கு புதிய சாலைகளை நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு பணம் வேண்டுமென்று கேட்டோம். இதுவரையில் பதில் இல்லை. இருப்பினும் மீண்டும், மீண்டும் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். கடைக்கண் பார்வையை இந்த பக்கமும் திருப்ப வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். கடைக்கண் பார்வை கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எர்ணாகுளத்திலிருந்து, என்னுடைய தொகுதி பார்டரான போடிமெட்டு வரை தேசிய நெடுஞ்சாலையாக கேரளா அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேனி வரையில் இருக்கிற சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற சிபாரிசு செய்ததாகச் சொன்னார்கள்,

ஆகவே போடிமெட்டிலிருந்து தேனி வரையில் உள்ள சாலையை நெடுஞ்சாலையாக்குவதற்கு அரசு ஆலோசனை கூறுமா? இந்த சாலை கொச்சின் துறைமுகத்தை தூத்துக்குடி துறைமுகத்தோடு இணைக்கிற குறுகிய இடைவெளியாக இருக்கிறது. இது இந்த வகையில் அரசுக்கு நல்ல வாய்ப்பைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த சாலையை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதனுடைய முக்கியத்துவத்தை ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு இணைப்புச் சாலையாக இருக்கும் என்கிற விவரத்தைத் தெரிவித்து இருக்கிறோம். ஆகவே தகுந்த ஆணைகள் வருமென்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோயர் கேம்பிலிருந்து குமளி வரையில் இருக்கும் மலைச்சாலை மிக்வும் மோசமாக இருக்கிறது. சமீபத்தில் ஒரு விபத்து கூட அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக முனைப்பாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளேன். ஆகவே இந்த மாதத்திலேயே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று மாநிலங்களை இணைக்கும்படியாக நெடுஞ்சாலை திண்டுக்கல், பெரியகுளம், தேனி, கூடலூர், குமளி வரையில் போகக்கூடிய பாதை இருக்கிறது. சமீபத்திலே கூட அங்கே விபத்துக்கள் நடந்ததை நாம் அறிவோம். ஆகவே இந்த நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு சிபார்சு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே, திண்டுக்கல், பழனி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் இவைகளைச் சேர்ந்த சாலையினை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு தாக்கீது கொடுத்திருக்கிறோம். ஆகவே நீங்கள் கூட திண்டுக்கல் சேர்ந்திருக்கிறது என்பதில் பெருமை கொள்ளலாம்.

திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம்

*வினா எண் 132— திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—